# தாயுமானவர் திருப்பாடல்களில் 'மனம்'

**செல்வி செல்வகுமாரி சிவலிங்கம்**

வேதாரணியம் என வழங்கப்படும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்பப்பிள்ளை கெஜவல்லி அம்மையார் ஆகிய பெற்றோருக்கு மகவாக அவதரித்த தாயுமானவ சுவாமிகள் என்பவரினால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதிக்கு தாயுமானவசுவாமிகள் திருப்பாடல்கள் என்று பெயர். இப்பாடல்கள் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் தோற்றம் பெற்றன. ஐம்பத்தாறு தலைப்புகளில் அமைந்த இவரது பாடல்களை அகவல், வண்ணம், கண்ணி என வகைப்படுத்துவர். உள்ளம், நெஞ்சு, இதயம், ஆத்மா, மாயாகாரியம் என மனதை அழைக்கும் தாயுமானவர், சோக்ரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், அனச்சகோரஸ், லொக் டேக்காட், கான்ட், வில்லியம் ஜேம்ஸ், கியூம், கில்பேட் ரையில் போன்ற உளவியலாளர்களின் உளம் பற்றிய சிந்தனைகளுக்கு உடன்பாடான வகையிலும், எதிர்மறையான வகையிலும் தம் சிந்தனைகளை முன்வைத்துள்ளார். மனதினைப் பெரியதொரு மாயாதத்துவமாகக் கருதி மனித நடத்தைக்குப் பின்புறம் மனம் என்ற வகையில் மனதை அணுகுகின்றார். இப்பின்னணியில், தாயுமானவர் பாடல்களில் மனம் பற்றியதொரு விமர்சன நோக்காக இவ்வாய்வு அமைகின்றது.

**விளக்கச் சொற்கள்:** தாயுமானவர் திருப்பாடல்கள், உள்ளம், ஆத்மா, நடத்தை.

**அறிமுகம்:**

தாயுமானவர் திருப்பாடல்களை,

| | |
|---|---|
| 01 முதல் 39 வரையுள்ள பாடல்கள் | 587 |
| 40 முதல் 59 வரையுள்ள கண்ணிகள் | 833 |
| 54 ஆனந்தக்களிப்பு | 30 |
| 55, 56 அகவல் வண்ணம் | 02 |

(மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1452)என வகைப்படுத்துவர்.

**ஐம்பத்தாறு தலைப்புகளில் இப்பாடல்கள் அமைந்துள்ளன. அவை வருமாறு:**

திருவருள்விலாசப் பரசிவ வணக்கம், பரிபூரணானந்தம், பொருள் வணக்கம், சின்மயானந்தகுரு, மௌனகுரு வணக்கம், கருணாகரக்கடவுள், சித்தர்கணம், ஆனந்தபரம், சுகவாரி, எங்கும் நிறைகின்ற பொருள், சச்சிதானந்த சிவம், தேசோமயானந்தம், சிற்சுகோதயவிலாசம், ஆகாரபுவனம் - சிதம்பரரகசியம், தேன்முகம், பன்மாலை, நினைவொன்று, பொன்னை மாதரை, ஆரணம், சொல்லற்கரிய, வம்பனேன், சிவன் செயல், தன்னையொருவர், ஆசையெனும், எனக்கெனச் செயல், மண்டலத்தின், பாயப்புலி, உடல் பொய்யுறவு, ஏசற்ற அந்நிலை, காடுங்கரையும், எடுத்த தேகம், முகமெலாம், திடமுறவே, ஆக்குவை, கற்புறுசிந்தை, மலைவளர் காதலி, அகிலாண்ட நாயகி, பெரிய நாயகி, தந்தை தாய், பெற்றவட்கே, கல்லாலின், பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி, எந்நாட்கண்ணி, காண்பேணோ என் கண்ணி, ஆகாதோ என்கண்ணி, இல்லையோ என் கண்ணி, வேண்டாவோ என் கண்ணி, நல்லறிவே என் கண்ணி, நின்ற நிலை, பாடுகின்ற பனுவல், ஆனந்தக்களிப்பு, அகவல், வண்ணம் என ஐம்பத்தாறு தலைப்புகளில் அமைந்துள்ளன.

இப்பாடற் தலைப்புகளில்,

தேசோமயானந்தம், ஆகாரபுவனம், பன்மாலை, பொன்னை மாதரை, ஆரணம், வம்பனேன், தன்னையொருவர், ஆசையெனும், எனக்கெனச் செயல், மண்டலத்தின், பாயப்புலி, உடல் பொய்யுறவு, ஏசற்ற அந்நிலை, காடுங்கரையும், கல்லாலின், பராபரக்கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாட்கண்ணி, ஆகாதோ என் கண்ணி, பலவகைக்கண்ணி, ஆனந்தக்களிப்பு ஆகிய பாடற்பகுதிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**மனம்:**

மனதினை உள்ளம், ஆவி, இதயம், உயிர் போன்ற இதர மொழிகளாலும் அழைப்பர். 'மனம்' பார்க்கின்ற, கற்பனை செய்கின்ற குணங்களைக் கொண்டது. சோக்ரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்ரோட்டில், சிக்மன் பிராய்டு, லொக், கான்ட், வில்லியம் ஜேம்ஸ்,டேக்காட், கியூம் ஆகியோர் மனம் பற்றி ஆராய்ந்தவர்களுள் முதன்மையானவர்கள். இவர்கள்

ஒவ்வொருவரும் மனம் பற்றி வெவ்வேறு விதமான கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அவை வருமாறு:

**பிளேட்டோ:**

மனம் சடமல்லாத வஸ்து எனக் கூறியதுடன், அதன் செயற்பாட்டினை மூன்று வகையாகப் பிரித்துக்காட்டினார்.

நியாயம் → ஆன்மாவின தெய்வீகம் சார்ந்த பகுதி
விருப்பு → வயிறு
உணர்வு → மார்பு

வயிறும், மார்பும் ஒன்றோடொன்று தொடர்புடையது போலக் காணப்படினும் வேறுபாடுடையது என்பது பிளேட்டோவின் கருத்தாகும்.

**டேக்ககாட்:**

மனம் சடமல்லாத வஸ்து எனக் கூறினார். (இவரது கோட்பாடு மன வஸ்துக் கோட்பாடு என அழைக்கப்படுகின்றது) (mind is a non materialsubstance) மனம், சடம் என்பன இரு பொருட்கள் என்பது இவரது கருத்தாகும். நான் சிந்திக்கின்றேன், ஆதலால் நான் உள்ளேன் என்ற கூற்றின் வழி மனதின் இருப்பினை நிறுவியதுடன் மனம் சடமல்லாத வஸ்து, சிந்திக்கும் இயல்புடையது, உணர்தல், விரும்புதல். ஞாபகப்படுத்தல், தீர்மானித்தல். ஐயமுறுதல், புரிந்து கொள்ளல் ஆகிய இயல்புகளைக் கொண்டதுடன் கடவுள் தவிர்ந்த வேறு எந்த வகையிலும் மனதினை அழிக்க முடியாது எனக் கூறினார்.
'ஆறறிவது அவற்றொடு மனனே' என்பது தொல்காப்பியம்.

**அரிஸ்ரோட்டில்:**

மனம் ஒரு வஸ்து எனக் கூறியதுடன் மனதிற்கும், உடலிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனக் கூறுகின்றார். மனிதனின் முழுமுதற் செயலாக்கத்திற்கு அதியுயர்ந்த தரத்திலான சக்தியாக மனம் அமைகின்றது. அதாவது, ஒழுங்குபடுத்தும் (organizing) தத்துவமாக அமைகின்றது எனக் கூறினார்.

**கான்ட்:**

மனம் என்பது ஒரு வஸ்தல்ல என்பது இவரது கருத்தாகும்.

**கியூம்:**

மனம் என்பது அனுபவங்களின் கூட்டுத்தொகையாகும் என்பது இவரது கருத்தாகும். (Mind is a bundle of experienceor collection of perceptions)

**வில்லியம் ஜேம்ஸ்:**

மனம் உணர்வுகளின் ஓட்டக் கோட்பாடு என்பது இவரது கருத்தாகும்.(Stream of consciousness theory).

**கில்பேட்றையில்:**

மனம் நடத்தையின் வடிவம் எனக் கூறினார். (Mind is aformof behavior)மூளையைத் தவிர ஆன்மா, மனம் என ஒன்றில்லை என்ற கருத்தும் காணப்படுகின்றது.

இந்திய மெய்யியலிலும் மனம் முதன்மை பெறுகின்றது. சைவ சித்தாந்தம் மனதினை அறிதலுக்குரிய பொருளாகக் கூறி, அதன் செயற்பாட்டினை நான்கு வகையாகக் கூறுகின்றது அவை வருமாறு:

01. மனம்

02. புத்தி
03. சித்தம்
04. அகங்காரம்

வேதாந்திகள் மனதினை அறிவைத் தரும் அந்தக்கரணமாகக் கூறுகின்றனர்.

**தாயுமானவர் திருப்பாடல்களில் மனம்:**

மனம், மனதின் செயற்பாடுகள், மனம் அடங்குவதற்குரிய வழிகள், மனம் - மாயை என்பனவற்றுக்கிடையேயான தொடர்புகள், மனதின் இழிநிலை, மனதின் செயற்பாட்டிற்கும் பிறப்பிறப்பிற்குமிடையேயான தொடர்புகள் பற்றித் தாயுமானவர் தம் பாடல்களில் மிகத் தெளிவாகக் கூறுகின்றார். தாயுமானவர் மனதை உள்ளம், ஆத்மா, நெஞ்சு, இதயம், சிந்தை என வேறு பெயர்களினால் சுட்டுகின்றார். மனதின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு மனதிற்கு மேல்வரும் அடைமொழிகளைக் கொடுக்கின்றார். அவை வருமாறு:

பாழான மனம், அறிவிலி மனம், மூட மனம், மாயையின் செயலான மனம், மரமனம், பம்பரமனம், வஞ்ச மனம், குரங்கு மனம், மானைப் போன்ற மனம், கல்மனம், இழிவான மனம், கள்ள மனம், அருட்டன்மை மனம். மருட்டன்மை மனம், மானைப் போன்ற மனம், நீர்க்குமிழி மனம், வஞ்ச மனம் என்பன.

பாழான மனம் என்பதனை,

“பாழான என்மனம் குவியவொரு தந்திரம் பண்ணுவ”

(பரிபூரணானந்தம்: 12)

என்றும்,

புழுவைப் போன்று கொடியது மனம் என்பதனை,

“பற்றுவெகு விதமாகி ஒன்றைவிட் டொன்றனைங்
பற்றியுழல் கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தை……”

(மௌன குருவணக்கம்: 46)

என்றும்,

மனதின் பழிப்புரை என்ற பாடற் தொகுதியில்,

ஆன்மாவின் மனம் மூடமனம் என்றும், இறைவனின் மனம் அருள் மனம் என்றும் கூறுகின்றார். இக்கருத்தினை,

“தாயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலம் கெடவருள்செயாய்”

(சச்சிதானந்த சிவம்: 107)

என்றும்,

மனம் ஒரு குரங்கு என்பதனை,

“மறுகிச் சுழலும் மனக் குரங்கு”

(ஆசையெனும்: 334)

என்றும்,

“காடும் கரையும் மனக்குரங்கு”

(காடும் கரையும்: 553)

என்றும்,

எல்லாத் துன்பங்களுக்கும் காரணமான மனமானது பேய்க் குரங்கு என்பதனை,

“கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்றபேய்க்
குரங்காய்க்
கள்ளமனம் துள்ளுவதென் கண்டோ பராபரமே!”

(பராபரக்கண்ணி: 807)

என்றும்,

“குணமிலா மனமெனும் பேய்க் குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழல என்னை
வைத்தனையே”

(கல்லாலின்: 609)

என்றும்,

காற்றாடி போன்றது மனம் என்பதனை,

''ஆடுங்கறங் காகி அலமந் துழன்றுமனம்
வாடுமெனை ஐயாநீ வாஎனவும் காண்பேனோ!''

(காண்பேனோ என்கண்ணி: 1336)

என்றும் கூறுகின்றார்.

மேலும்,வானத்தில் பறக்கும் காற்றாடிக்கு தன் மனதினை ஒப்பிட்டுக் காற்றாடியினைப் போன்று தன் மனம் சுழன்று வருந்துகின்றது என்று கூறுகின்றார்.

இன்னுமொரு பாடலில் வாலற்றக் காற்றாடிக்கு மனதினை உவமித்து, அதன் மூலமாக தன் மனம் வலியற்றுக் கிடக்கின்றது என்றும் அதற்கு இறைவன் அருள்புரிய வேண்டும் என்று கூறுகின்றார்.இக்கருத்தினை,

''வால்அற்ற பட்டமென மாயா மனப்படலங்
கால்அற்று வீழவும்முக் கண்ணுடையாய் காண்பேனோ''

என்ற பாடல் அறியத்தருகின்றது.

மரத்தைப் போன்றது மனம் என்பதனை,

''மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்டி''

(ஆசையெனும்: 323)

என்றார்,

வலியமனம், இரக்கமில்லாத மனம், மண்ணாங்கட்டி மனம் என்பதனை,

''தன்னெஞ்சம் நினைப்பொழியாது அறிவிலிநான் ஞான
-மெனுந்
தன்மை பேச
……………………
வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ இரும்பு
-நெஞ்சோ
வயிரமான
கன்னெஞ்சோ அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ
-எனதுநெஞ்சம்''
கருதிற் றானே"

(ஆசையெனும்: 325)

என்றும்,

மனம் அலைபாயும் தன்மையது என்பதனை,

''இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தைவழிச்
செல்லாமை…………..''

(பராபரக்கண்ணி: 828)

என்றும்,

''பற்றற் றிருக்கும்நெறி பற்றிற் கடல்மலையும்
சுற்ற நினைக்குமனம் சொன்னேன் பராபரமே''

(பராபரக்கண்ணி: 877)

என்றும்,

''ஆசை யெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ் செனவுமனம்
அலையும் காலம்
…………………………….''

(ஆசையெனும்: 322)

என்றும் கூறுகின்றார்.

வஞ்ச நெஞ்சம் என்பதனை,

''ஆழாழி என்ன அளவுபடா வஞ்சநெஞ்சப்
…………………''

(பராபரக்கண்ணி: 1137)

எனக்கூறுகின்றார்.

**மனதின் இயல்புகள்:**

மனம் துன்பவயப்படக்கூடியது, ஆசைக்குட்பட்டு அழிவினைத் தேடிக் கொள்ளும் தன்மையது, தீய செயல்களைச் செய்யவல்லது. அடக்கமற்றது, யான் எனது எனும் பற்றுடையது, ஐம்புலன்வழி செல்லவல்லது, இரக்கமற்றது, குறிக்கோள் இல்லாதது, தான் நினைத்தாற் போல் வேறொன்றினைப் பற்றியுழலும் தன்மையது, அறியாமையுடையது, வஞ்சமுடையது, இழிவானது, வஞ்சம், பொய் என்பனவற்றினை மனதிற் கொண்டுத் தடுமாறும் இயல்புடையது எனத் தாயுமானவர் மனதின் இயல்புகள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

மனம் பிறவியை உண்டாக்குகின்ற பொறி புலன்களில் செல்லவல்லது என்பதனை மேல்வரும் பாடல் மூலமாக அறியத்தருகின்றார். அப்பாடல் வருமாறு:

"தவமே தரும்ஐம் புலப்பொறிக்
கேயென் அறிவுபொல்லாம்
பவமே விளைக்கஎன் றோவெளி
மான்எனப் பாய்ந்ததுவே."

(பாயப்புலி: 410)

மனம் துயர் கொள்ளவல்லது என்பதனை,

"எண்ணாத தெண்ணிய நெஞ்சே
துயர் ஒழி"

(பாயல்புலி: 413)

என்றும்,
மனம் உருகும் இயல்புடையது என்பதனை,

"இளக மனம் அழலின் மெழுகாய்"

(சுகவாரி: 80)

என்றும்,
மனம் துள்ளும் இயல்புடையது என்பதனை,

"துள்ளுமறி யாமனது பலிகொடுத்தேன் கன்ம
துட்டதேவதைகள் இல்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன்ப பிடேகநீர்
உள்ளுறையில் என்ஆவி நைவேத்தியம் பிராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகாலம் அன்றிதுசதாகால பூசையா
ஒப்புவித்தேன் கருணைகூர்"

(கருணாகரக் கடவுள்: 54)

என்றும் கூறுகின்றார்.

துள்ளுமறி யாமனது என்ற பாடலில், மனதினை துள்ளுகின்ற ஆட்டிற்கு உவமித்து,மனம் உலகப் பொருட்களைப் பற்றுகின்றது என்றும், அதனால் பிறப்பு, இறப்பு என்பன ஏற்படுகின்றன என்றும் கூறுவது குறிப்பிடற்பாலது.

மனம் மோகம் முதலான குணங்களில் மூழ்கவல்லது என்பதனை வலியுறுத்தும் பாடல் வருமாறு:

"வேத முதலாய் விளங்கும் சிவவடிவாம்
போத நிலையில் பொருந்தாமல் ஏதமிகு
மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சேயிந்
தேகாதி மெய்யோ தெளி"

(உடல் பொய்யுறவு: 476)

கள்ளம், பொறாமை முதலான குணங்களினால் உள்ளம் சூழப்பட்டது என்பதனை அறியத்தரும் பாடல் வருமாறு:

"வஞ்சனை அழுக்கா றாதி
வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேன்மேல்
நெக்குநெக் குருகப் பண்ணி
……………..."

(வம்பனேன்: 295)

மனம் உயிர்களுக்கு துன்பத்தினை விளைவிக்கவல்லது என்பதனை,

"மனமான வானரக்கைம் மாலைஆ காமல்
எனையாள் அடிகள்அடி எய்தும்நாள் எந்நாளோ!"

(எந்நாட்கண்ணி: 1146)

மனம் எண்ணுகின்ற எண்ணங்கட்கு அளவில்லை என்பதனை பின்வருமாறு கூறுகின்றார்.

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணியேழை
-நெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே!"

(பராபரக்கண்ணி: 670)

**மனமும் மாயையும்:**

அறியாமையினையுடைய மாயையின் செயலே மனம் என்பதனை,

........................
"மடம்பெறு மாயை மனமே
இனியிங்கு வாமௌனி"

(பாயப்புலி: 417)

எனக் குறிப்பிடுகின்றார்.

**மனம் ஒடுங்குவதற்குரிய வழிகள்:**

மனதை ஒரு நிலைப்படுத்தி அடக்கியிருத்தல் இயலாத காரியம் என்பதனை தாயுமானவர் பின்வரும் உதாரணங்களூடாக அறியத்தருகின்றார். அதாவது , கட்டுத்தறியை முறிக்கும் மதயானையினை வசப்படுத்த முடியும், கரடி, புலியினை அடக்கலாம், சிங்கம் ஒன்றின் முதுகில் அமர்ந்து செல்லலாம், நஞ்சினையுடைய பாம்பினைப் புற்றினின்று எடுக்கலாம், பாதரசத்தையும் உலோகத்தையும் உண்ணலாம் தேவர்கள் தம் ஏவலைச் செய்யுமாறு செய்யலாம், எப்பொழுதும் இளமையுடன் இருக்கலாம், வேறொருவரின் உடலில் புகலாம், ஆனால், மனதினை நல்வழிப்படுத்தும் திறத்தைச் செய்து உள்ளத்தை அடக்குவது இயலாத காரியமாகும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை மேல்வருமாறு சித்திரித்துக்காட்டுகின்றார்:

"கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோகத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொள்ளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம்அரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே!"

(தேசோமயானந்தம்: 118)

இவ்வாறு மனதினை அடக்குதல் எளிதன்று எனக் கூறினாலும் மேல்வரும் வழிகளைப் பின்பற்றுவதன் வாயிலாக மனதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரலாம் என்பது அவர் தம் கருத்தாக அமைகின்றது. அவை வருமாறு:

மனம் அடங்குவதற்கு யோகப்பயிற்சி அவசியம் என்றும், நீ என்பது அடங்கும் அந்நிலையே நிட்டை என்றும், யான், எனது என்ற செருக்கு நீங்குதல் இன்ப நிட்டை என்றும், மௌனமே நிட்டை என்றும் தாயுமானர் கூறுகின்றார். இக்கருத்தினை,

"சொல்லால் மவுனம் மனமென்
ரேசொல்லிச் சொல்லிக்கொண்ட
"தல்லால் மனம்அறப் பூரண
நிட்டையில் ஆழ்ந்ததுண்டோ"

(பாயப்புலி: 424)

என்ற பாடல் அறியத்தருகின்றது.

கல்லால மரத்தின் கீழ் இருக்கின்ற இறைவனை வணங்குவதனால் உள்ளம் ஒடுங்கும் என்பதனை,

"ஆரணம் ஆகமம் எல்லாம்
உரைத்த அருள்மௌன
காரண மூலம்கல் லாலடிக்
கேயுண்டு காணப்பெற்றால்
பாரணம் கோடு சுழல்நெஞ்ச
மாகிய பாதரசம்"

(பாயப்புலி: 425)

என்ற பாடலும்,
இறைவனது திருவருளினால் உள்ளம் ஒடுங்கும் என்பதனை,

"வாராய்நெஞ் சேஉன்தன்துன்மார்க்கம்
யாவையும் வைத்துக் கட்டிங்கு
ஆராய் அடிக்கடிச் சுற்றுகின்
றாய்உன் னவலமதிக்கு
ஓரா யிரம்புத்தி சொன்னாலும்
ஓர்கிலை ஓகெடுவாய்
பாராய் உனைக்கொல்லு வேன்வெல்லு
வேன்அருள் பாங்குகொண்டே"

(பாயப்புலி: 450)

என்ற பாடலும்,

"தாயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலம் கெடவருள்செயாய்
சர்வபரி பூரண **அகண்**டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே"

(சச்சிதானந்தம்:107)

என்ற பாடலும்,

"பாழான என்மனம் குவியவொரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமறநிறைகின்ற
பரிபூர ணானந்தமே"

(பரிபூரணானந்தம்: 12)

என்ற பாடலும் அறியத்தருகின்றன.

இறைவனின் திருவருள் கிட்டினால் உள்ளத்தில் ஆசை, பொறாமை என்பன நீங்கிவிடும் என்பதனை,

"உய்யும் படிக்குன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால் உடையாய் பாழ்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவு பெறும்பேறும்"

(தன்னையொருவர்: 317)

எனக் கூறுகின்றார்.

மனம் அடைக்கலம் புகுவதற்கேற்ற இடம் இறைவனது திருவருள் என்பதனை,

"எல்லாம் சிவன்செயல் என்றறிந்

தால்அவன் இன்னருளே
அல்லால் புகலிடம் வேறுமுண்
டோஅது வேநிலையா
நில்லாய்உன் னால்தமி யேற்குக்
கதியுண்டிந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தில் ஆழ்ந்தாவ
தென்ன புகல் நெஞ்சே''

(பாயப்புலி: 445)

எனக் கூறுகின்றார்.

அத்துடன் ஆணவமலம் நீங்கினால் மனம் ஒடுங்கும் என்றும் அவ்வாறு ஒடுங்கின் உலகியல் பொருட்கள் யாவும் அருள் வடிவாகக் காணப்படும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை,

''பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின் எல்லாம்
வெட்டவெளியாக விளங்கும் பராபரமே''

(பராபரக்கண்ணி: 997)

என்ற பாடலினூடாக அறியத்தருகின்றார்.

ஞானம் கைவரப்பட்ட சித்தர்களின் சித்துக்களை விடவும் அரிதானது மனதை உருகச் செய்தல் என்பதனை,

''உரகனும் இளைப்பாற யோகதண்டத்திலே
உலகுசுமை யாகவருளால்
மீட்டிடவும் வல்லநீர் என்மனக் கல்லையனல்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே''

(சித்தர் கணம்: 58)

என்ற பாடல் அறியத்தருகின்றது.

வீண்வார்த்தைகள் பேசுவதனைதவிர்த்துவிட்டுகங்கைஅணிந்த திருமுடியுடையவனை நாவால் கூற மனம் கரையும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை,

''நேராயம் மௌனநிலை நில்லாமல் வாய்பேசி
ஆராய் அலைந்தீர் ஆகெடுவீர் - தேரீர்
திரையும் திரையும்நதிச் சென்னியனை நாவால்
கரையும் கரையும்மனக்கல்''

(உடல் பொய்யுறவு: 471)

என்ற பாடல் விளக்கி நிற்கின்றது.

**மனம் இன்பம் அடைவதற்கான வழிகள்:**

மனம் சிவனே என்று சும்மா இருப்பதனால் இன்பம் உண்டாகும் என்பதனை,

''சும்மா விருக்கச் சுகம் சுகம்
என்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும்
கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மௌனி மொழியையும்
தப்பிஎன் பேதமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்ததேன்
அந்தோஎன் விதிவசமே''

(பாயப்புலி: 436)

என்ற பாடல் விளக்கி நிற்கின்றது. இவ்விடத்தில்,

''உள்ளும் புறமும் நினைப்புஅறில் உன்னுள்ளே
மொள்ளா அமுதாம் என்று உந்தீபற''
முளையாது பந்தம்என்று உந்தீபற''

(திருவுந்தியார்: 26)

என்ற பாடல் குறிப்பிடப்பாலது. ஏனெனில்,

மனம் எதனையும் நினைக்காமல் வெறுமனே சும்மாவிருப்பதன் வாயிலாக பந்த பாசங்களை அறுத்து நிம்மதியாக வாழ முடியும் என்கிறது அப்பாடல்.
அன்பால் நெகிழ்ந்து உருகிக் கண்களில் நீரைச் சிந்தினால் இன்பம் ஏற்படும் என்பதனை,

''...............
இன்பக் கடலில் இரும்என்ன – அன்பினில்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரும் ஆனந்த மே''

(உடல் பொய்யுறவு: 497)

என்ற பாடல் எடுத்தியம்புகின்றது.

மனம் இறைவனை அடைந்தால் இன்பம் உண்டாகும் என்பதனை,

..............................
''தப்புவழி ஏன்நினைந்தாய் சந்ததமும் நீஇருந்த
எய்ப்பிலே ஆனந்தமே''

(உடல் பொய்யுறவு: 499)

எனக் கூறுகின்றார்.

**மனதின் இழி நிலை:**

மனமானது உலக வழியில் சென்று பற்றுக்களுக்குட்படுகின்றது என்பதனை,

''நெஞ்சமே ஊசற்கயிறு போல உலக நெறியின் கண்ணே
சென்று சென்று பற்றெனுங் கட்டினுள்''

என்றும்,

பெரிய குரங்கைப் போன்ற மனமே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் என்பதனை,

''பொல்லாத மாமற் கடமன
மேஎனைப் போல் அடுத்த
எல்லாவற்றை யும்பற்றிக் கொண்டனையே
என்னை நின்மயமா
நில்லாய் அருள்வெளி நீநான்நிற்
பேன்அருள் நிட்டையொரு
சொல்லால் பதிந்து பரிபூர
ணானந்தம் தோய்குவனே''

(பாயப்புலி: 449)

என்றும் கூறுகின்றார்.

அதாவது, இப்பாடலில் மனம் துன்பத்திற்கு காரணம் என்பதுடன், உலகப் பொருட்களைப்பற்றவல்லது என்று கூறுகின்றார்.

**அத்துவிதம்:**

மனமும் இறைவனும் இரண்டறக்கலத்தலே அத்துவிதம் என்பது தாயுமானவரது கருத்தாகும்.

**ஐம்பொறிகளும் மனமும்:**

ஐம்பொறிகளின் வழி மனம் செல்லவல்லது என்பதனை தாயுமானவர் மேல்வருமாறு கூறுகின்றார்.

''சிவமாதி நான்முகக் கோஅந்த
......................
தவமே தரும்ஐம் புலப்பொறிக்
கேயென் அறிவுபொல்லாப்

பவமே விளைக்களன் றோவெளி
மான்எனப் பாய்ந்ததுவே.''
(பாயப்புலி: 410)

மனம் பொறி புலன் வழி செல்வதனால் தான் பிறவித் துயர் ஏற்படுகின்றது என்றும், மனம் பொறி, புலன் வழி செல்லாவிடின் பிறவித் துயர் ஏற்படாது என்றும் ஐம்புலன் வழி செல்லும் மனதினை அடக்கி கட்டுப்படுத்தும் ஆற்றல் மௌனகுருவிற்கே உண்டு எனக் கூறுகின்றார். இக்கருத்தினை,

''என்அறிவை யுள்ளடக்கி என்போல் வரும்மவுனி
தன்அறிவுக்குள்ளேநான் சாரும்நாள் எந்நாளே''
(எந்நாட்கண்ணி: 1102)

என்ற பாடல் அறியத்தருகின்றது.

மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளின் தாக்குதலால் தான் உள்ளம் துன்பமடைகின்றது என்பதனை,

''புலன்ஐந்தும் தானே பொரமயங்கிச் சிந்தை
அலமந் துழலும் அடிமை – நலம்மிகுந்த
சித்தான மோன சிவனே''
(உடல் பொய்யுறவு: 505)

என்ற பாடல் மூலம் அறியத்தருகின்றார்.

மேற் செப்பப்பட்ட கருத்தினை அரண் செய்யும் வகையில்,

''அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே''
(திருக்களிற்றுப்படியார்: இன்புறுநிலை, 35)

என்றும்,

துன்னியஐம் புலவேடர் சுழலில்பட்டுத்
துணைவனையும் அறியாது துயர்உறுந்...''
(சிவஞானசித்தியார்: சுபக்கம், எட்டாம்சூத்திரம்)

என்றும் கூறுகின்றன.

எனவே, ஐம்புலன்களின் வழி மனம் செல்லலாகாது என்பதனை இந்நூல்கள் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

**அடியார் மனம்:**

சிவனடியார்களின் உள்ளம் அழகிய கோயில் என்றும், அவர்களுடைய உள்ளம் தெளிவானது என்பதும் தாயுமானவரது கருத்தாகும். இக்கருத்தினை,

''சுகமாகும் ஞானம் திருமேனி
யாநல்ல தொண்டர்தங்கள்
அகமேபோற் கோயில் எனமகிழ்ந்
தேமன்று ளாடியகற்
பகமே உன் பொன்னடி நிழல்கண்''
.....................
(பாயப்புலி: 408)

எனக் கூறுகின்றார்.

சிவனடியார்களது உள்ளம் சஞ்சலமடைவதில்லை என்பதனை,

''சித்தம் தெளிந்தோர் தெளிவில் தெளிவான
சுத்த சுகக்கடலுள் தோயும்நாள் எந்நாளோ''
(எந்நாட்கண்ணி: 1215)

எனக் கூறுகின்றார்.

**ஞான வீரர்களது உள்ளம்:**

கலங்காத நெஞ்சம் உடையவர்கள் ஞான வீரர்கள் என்பதனை,

"கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்"

(கல்லாலின்: 626)

எனக் கூறுகின்றார்.

**மங்கையர் மனம்:**

மங்கையர் மனம் பற்றிக் கூறுகின்ற போது மங்கையர்களது மனமானது தெளிவற்றது என்றும், வஞ்சமுடையது என்றும் கூறுகின்றார். இக்கருத்தினை,

"ஆழாழி என்ன அளவுபடா வஞ்ச நெஞ்சப்
பாழான மாதர்மயல் பற்றொழிவ தெந்நாளோ"

(எந்நாட்கண்ணி: 1137)

எனக் கூறுவதனூடாக அறிந்துகொள்ளலாம். அதாவது, இப்பாடலின் மூலமாக ஆழ்ந்த கடலைப் போன்ற அளவில்லாத வஞ்சத்தையுடைய நெஞ்சமுடையவர்கள் பெண்கள் எனக் கூறி, அப்பெண்களுடன் சேராது அதிலிருந்து தான் விடுதலை அடைய வேண்டும் எனக் கூறுகின்றார்.

மனம் என்ற பொருள் தன் வசமில்லை என்பதனை,

"…………………………………………………….
மனதென் பதுமோ என் வசமாய்
வாரா தைய நின்அருளோ
தனதென் பதுக்கும் இடம்காணேன்"
……………………………………….…………."

(தன்னையொருவர்: 316)

என்றும்,

மனம் அங்கும் இங்கும் தன்னை இழுத்தடிக்கின்றது என்பதனை,

"இழுக்கடித்தாய் நெஞ்சேநீ ளென்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணார்போ லாய்"

என்றும் கூறுகின்றார்.

மனம் இறைவனுக்குரிய திறைப் பொருள் என்பதனை,

"அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக் கூத்தனுக்கென்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்பது எந்நாளோ"

(எந்நாட்கண்ணி: 1232)

எனக் கூறுகின்றார்.

தன் மனம் இரக்கமில்லாதது என்பதனை,

"எள்ளத் தனையும் இரக்கமிலா வன்பாவி
உள்ளத்தும் எந்தை யுலாவிடவும் காண்பேனோ"

(காண்பேனோ என்கண்ணி: 1331)

எனக் கூறுகின்றார்.

குற்றம் பொருந்திய மனத்தையுடைய வஞ்சகன் என்பதனை,

"மாசான நெஞ்சன்இவன் வஞ்சன்என்றோ
-வாய்திறந்து
பேசா மவுனம் பெருமான் படைத்ததுவே!"

(பலவகைக்கண்ணி: 1394)

எனக் கூறுகின்றார்.

**மனத் துறவு:**

மனத்துறவினை மேற்கொள்வது கடினமானது என்றும், உலகப் பற்றுக்களைத் துறந்தவர்களினாலே மனத் துறவினை மேற்கொள்ள முடியும் எனக் கூறியதுடன், பட்டினத்தடிகளின் புறத்துறவினை சிறப்புப் படுத்திக் கூறுகின்றார். அதாவது, பட்டினத்தடிகள்

மேற்கொண்ட புறத்துறவினைப் போல மனத் துறவினை மேற்கொள்வதும் அரிதான ஒரு காரியமாகும் எனக் கூறுகின்றார்.

இக்கருத்தினை,

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்பிள்ளை
-யைப்போல்
ஆருந் துறக்கை அரிதரிது – நேரே
மனத்துறவும் அப்படியே மாணா இவற்றில்
உனக்கிசைந்த வாறொன்றே ஓர்"

(உடல் பொய்யுறவு: 516)

என்ற பாடல் அறியத்தருகின்றது.

**மனம், மாயை திருவருள் என்பனவற்றுக்கிடையேயான தொடர்புகள்:**

மாயையின் காரணமாக மனம் ஏற்படுகின்றது என்றும், ஞான வடிவமாக உள்ள திருவருள் தான் மனம் உண்டாவதற்கு காரணம் என்றும் கூறுகின்றார். திருவருள் தான் மனம் உண்டாவதற்கு காரணம் என்பதனை,

"மோன குரு அளித்த மோனமே ஆனந்தம்
ஞான அருளும்அது நானும்அது- வானாதி
நின்றலையும் அதுநெஞ்சப் பிறப்பும்அது
என்று அறிந்தேன் ஆனந்தமே"

எனக் கூறுகின்றார்.

மாயாகாரியமான உள்ளம் ஒழிந்து விடின் அறிவின்பம் ஏற்படும் எனக் கூறுவதன் வாயிலாக மாயாகாரியமானது உள்ளம் என்பது தாயுமானவரது கருத்தாகும். இக்கருத்தினை,

"…………………
வைத்தமவு னத்தாலே மாயை மனமிறந்து
துய்த்துவிடும் ஞான சுகம்"

(உடல் பொய்யுறவு: 540)

என எடுத்துரைக்கின்றார்.

மாயையின் காரியமாக இரவு, பகல் சிறிய மலை, குளம், காடு, பெரிய மலை, ஒலிக்கும் கடல், அம்பலம், வீடு, உள்ளம் ஆகியன உள்ளன என்பதனை,

"ஒன்றும் தெரிந்திட வில்லை என்
னுள்ளத் தொருவ எனக்கு
என்றும் தெரிந்த இவை அவை
கேள்இர வும்பகலும்
குன்றும் குழியும் வனமும்
மலையும் குரைகடலும்
மன்றும் மனையும் மனமாதி
தத்துவ மாயையுமே"

(பாயப்புலி: 432)

எனக் கூறுகின்றார்.

உலகனைத்தும் உண்டாவது மாயையினால் என்பதனை,

"………………..
விலகிடும் மலம்இ வற்றை
வேறுஅன்று அதுவே றாகி
உலகுடல் காரணமாகி
உதித்திடும் உணர்ந்து கொள்ளே"

(சிவஞானசித்தியார்: சுபக்கம், 81)

என்றும்,

உலகும், உடற்கருவிகளும் தோன்றுவதற்கு காரணம் மாயை என்பதனை,

"நித்தமாய் அருவாய் ஏக
நிலைஅதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும்

வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகம்
தனுகர ணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்கமும் செய்யுமன்றே''
(சிவஞான சித்தியார் சுபக்கம்: 53)

என சிவஞான சித்தியார் கூறுகின்றது.

அசுத்தமாயையின் காரியமே மனம் என்பதனை,

''காட்டிய அந்தக் கரணமும்
மாயையிக் காயம்என்று
சூட்டிய கோலமும் நானா இயங்கத்
துறையிதனுள்
நாட்டிய நான்றனக் கென்றோர்
அறிவற்ற நான்இவற்றைக்
கூட்டிநின் றாட்டினை யேபர
மேநல்ல கூத்திதுவே"

(பாயப்புலி: 448)

எனக் கூறுகின்றார்.

இக்கருத்தினையே சைவசித்தாந்தமும் ஏற்று நிற்கின்றது. மாயையில் எல்லாம் நுட்பமாக அடங்கியுள்ளது என்பதனை,

மாயையின் உள்ள வஞ்சம்
வருவது போவ தாகு(ம்)
நீஅதிங்கு இல்லை என்னின்
இகழ்ந்திடு முயலில் கோடு
போய்உகு(ம்) இலைக- ளெல்லாம்
மரங்களில் புக்குப் போதின்
ஆயிடும் அதுவும் என்னில்
காரணம் கிடக்க வாமே''
(சிவஞானசித்தியார் : சுபக்கம், 15)

என்ற பாடல் மிகத் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

அதாவது, அசுத்த மாயையின் காரியமே மனம் எனத் தாயுமானவர் கூற, அவ்யக்தம், மூலப்பிரகிருதி மாயையிலிருந்து தான் அந்தக்கரணம் தோன்றியதாக சிவஞான சித்தியார் சுபக்கம் கூறுகின்றது. இக்கருத்தினை,

''விந்துவின் மாயை யாகி
மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்து தன்பால்
வைகரி ஆதிமாயை
முந்திடும் அராகம் ஆதி
முக்குணம் ஆதிமூலம்
தந்திடும் சிவன் அவன் அதன்
சந்நிதி தன்னின் நின்றே''
(சிவஞானசித்தியார்: சுபக்கம், 19)

என்ற பாடல் எடுத்தியம்புகின்றது.

தைசதத்திலிருந்து மனம் தோன்றுகின்றது என்பதனை,

''மனம்அது தைச தத்தின்
வந்ததொரு பொருளை முந்தி''
(சிவஞானசித்தியார்: சுபக்கம்,60)

எனக் கூறுகின்றது.

இவ்வாறு மனதிற்கும் மாயையிற்குமிடையிலான தொடர்புகள் நுவலப்பட்டுள்ளன.தன் மனம் ஒடுங்கின் தன்னை சிவஞானியருடன் ஒப்பிடலாம் என்பதனை,

''பார்க்கின் அணுப் போல்கிடந்த பாழ்ஞ்சிந்தை மாளின்
-என்னை
ஆர்க்குச் சரியிடலாம் ஐயா பராபரமே''
(பராபரக்கண்ணி: 998)

என்றும்,

வன்மையான மனதையுடையதால் தன் வாழ்வு இழக்கப்பட்டது என்பதனை,
நன்னெஞ்சத்து அன்பர்எல்லாம் நாதரைச்சேர்ந்
-தின்பணைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான் வாழ்விழந்தேன் -பைங்கிளியே
(பைங்கிளிக்கண்ணி: 1056)

என்றும்,

மனம் குறிக்கோளுடன் செயற்பட வேண்டும் எனவும், மனம் குறிக்கோள் இல்லாது செயற்படின், வினைகளுக்குட்பட்டு பிறப்பிற்குட்பட்டு உலகப்பிடிப்புகளில் சிக்கி அல்லலுறும் என்பதனை,

''வந்த வரவை மறந்துலகாய் வாழ்ந்து கன்ம
பந்தமுற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்
இந்தமதி ஏன்உனக்கிங்கு என்மதிகேள் என்னாலே
சந்ததம்நெஞ் சேபரத்திற் சாரின்இன்பம் உண்டாமே''
(ஏசற்ற அந்நிலை: 549)

என்றும் கூறுகின்றார்.

**மனம் அடங்குதலால் பெறும் நன்மைகள்:**

அடங்காத மனதினை, கணவனுக்கு அடங்காதப் பெண்ணுக்கு உவமிக்கின்றார். ஏனெனில், கணவனுக்கு அடங்காத பெண் தானே வெளிச் சென்று சுற்றித்திரியும் இயல்புடையவளாகக் காணப்படுவாள். அது போன்று, அடக்கமில்லாத மனமும் மிக வன்மமானது என்றும், தீய செயல்களைச் செய்யவல்லது என்றும் கூறி, எனவே மனம் அடங்க வேண்டும் எனக் கூறுகின்றார்.ஏனெனில்,

எண்ணங்களை அடக்கி மனதை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதன் வாயிலாக, மேல்வரும் நன்மைகளை அடைய முடியும் என்பது அவர் கருத்தாக அமைகின்றது. அவை வருமாறு:

01. யான், எனது என்பன நீங்கும்
02. குருவின் திருவருள் கிட்டும்
03. எட்டு வகையான சித்திகள் கிடைக்கும்
04. வீடுபேறு கிடைக்கும் (சீவன் முக்தி)
05. அகங்காரங்கள் நீங்கும்
06. மலங்கள் அழியும்
07. இன்ப நிலை ஏற்படும்.

மனம் ஒடுங்கப் பெறாதவர்க்கு வாய்ப்பேச்சினால் எதுவித பலனும் இல்லை என்பதனை,

''சினம்இறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாய்ஏன் பராபரமே''
(பராபரக்கண்ணி: 804)

என்ற பாடல் மூலம் அறியத்தருகின்றார்.

மனம் தீய வழியில் செல்வதோடு உலகத்தில் எங்கும் உழலவல்லது என்பதனை, தீய வழியில் செல்லும் மனதினால் எதுவித பலனும் இல்லை என்பதனை,

''சூதாடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
''வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே''
(பராபரக்கண்ணி: 806)

என்ற பாடல் வரிகளினூடாகத் தெளிவுபடுத்துகின்றார்.

**மனம் - ஆலயம் என்பனவற்றுக்கிடையேயான தொடர்பு:**

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பாலயம் எனக் கூறிய திருமூலரைப் போன்று தாயுமானவரும் மனதிற்கும் ஆலயத்திற்குமிடையே ஒருமை காண்கின்றார். அதாவது, இறைவனை உள்ளத்தில் பொருந்த வைத்தலே மனதிற்கு சிறப்பாகும் எனக் கூறுகின்றார். இக்கருத்தினை,

"என்றும் உன்னை யிதய வெளிக்குளே
துன்ற வைத்தன னே அருட் சோதி நீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையாம்
நன்று தீதற வைத்த நடுவதே"

(பொன்னை மாதரை: 202)

என்றும்,

இறைவன் மெய்யறிவினரின் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டவர் என்பதனை,

"……………………………………….
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்
காட்சியே காட்சியே அறிஞர்
உளம்பெறும் துணையே பொதுவினில் நடிக்கும்
உண்மையே உள்ளவா றிதுவே"

(ஆரணம்: 274)

என்றும்,

அகவழிபாட்டுக்கு உள்ளமே கோயில், எண்ணமே மனப் பொருள், அன்பே மஞ்சன நீர் என்பதனை,

"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே"!

(பராபரக்கண்ணி: 786)

என்றும்,

என் நெஞ்சக் கல்லைக் கோயிலாகக் கொள் என்ற தலைப்பிலமைந்த பாடலில், பாவவடிவான கருங்கல்லைப் போன்ற மனமானது நினக்குரிய ஆலயம் என்பதனை,

"ஏதம் அற்றவர்க் கின்பமே பொழிகின்ற இறையே
பாத கக்கருங் கல்மனம் கோயிலாப் பரிந்து
……………………………………………………"

(எனக்கெனச் செயல்: 382)

என்றும்,

தன் மனதினைக் கோயிலாகக் கொண்டவர் மௌனகுரு என்பதனை,

"ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானம் தருமம் தழைத்தகுரு – மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு என்சிந்தை
கோயிலென வாழும் குரு"

(உடல் பொய்யுறவு: 541)

என்றும்,

பேச்சற்ற அன்பர்களின் மனத்தில் உயர்ந்த ஒளியாய் ஓங்கி வளர்ந்து விளங்குபவர் பரம்பொருள் என்பதனை,

"உரைஇறந்த அன்பர்உளத் தோங்கொளியாய் ஓங்கிக்
கரைஇறந்த இன்பக்கடலே பராபரமே"

(பராபரக்கண்ணி: 641)

என்றும் கூறுகின்றார்.

அதாவது, தாயுமானவர் அகவழிபாட்டிற்குச் சிறந்த இடம் உள்ளம் எனக் கூறுவதுடன் உள்ளமே ஞான ஒளி என்றும் கூறுகின்றார்.

**மனதின் செயற்பாட்டினை சுட்டிக்காட்டுவதற்குத் தாயுமானவர் பயன்படுத்தும் உதாரணங்கள்:**

**உயிரினங்கள்**: ஆடு, குரங்கு, மான், புழு,தேள்,

**உயிரற்ற பொருட்கள்:**

வானம், மலை, கடல், காற்றாடி, கல், மரக்கலம், மரம் நீர்க்குமிழி, இரும்பு, பம்பரம், பஞ்சு, பாதரசம்.

**பண்புப் பெயர்கள்:** அறிவிலி, வஞ்சகம், கள்ளத்தனம் என்பன.

**ஆய்வின் நோக்கம்:**

தாயுமானவர் திருப்**பாடல்**களில் இடம் பெறும் மனம் பற்றிய சிந்தனைகளை இனங்காணல்.

**ஆய்வு முறைமை:**

இவ்வாய்வில் சமூகவியல், விவரண ஆய்வு முறைமைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தகவல் சேகரிப்புநுட்ப முறை:**

முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகளாக தாயுமானவர் திருப்பாடல்களும், இரண்டாம் நிலைத் தரவுகளாக ஏனைய நூல்கள், சஞ்சிகைகள் என்பன காணப்படுகின்றன.

**ஆய்வின் முடிவு:**

உளவியலாளர்கள் மனதினை வஸ்து, சடப் பொருள், அனுபவங்களின் கூட்டுத்தொகை, உணர்வுகளின் ஓட்டக் கோட்பாடு, நடத்தையின் வடிவம், மனித செயலாக்கத்திற்கான அதியுன்னத சக்தி எனக் கூற, தாயுமானவர் மனதினை அந்தக்கரணங்களில் ஒன்று, மாயாகாரியத்தால் ஆனது, திருவருளால் ஆனது, புலன்களின் வழி செல்லவல்லது, மனச் செயற்பாட்டின் அடிப்படையில் செய்யப்படும் வினைகளே பிறப்பு, இறப்பு ஏற்படுவதற்கான காரணம், மனம் தீயநடத்தையின் வடிவம், மன ஒருமைப்பாட்டினை மேற்கொள்வது கடினமானது, அனைத்து துன்பத்திற்கும் காரணமானது, மனம் ஒடுங்க யோகப் பயிற்சி அவசியம், அகவழிபாட்டுக்குரிய இடம்,மனிதனின் அனைத்து செயற்பாட்டிற்கு காரணம் எனக் கூறுவது அவதானிக்கத்தக்கது. அதாவது, தாயுமானவர் மனதினைப் பெரியதொரு மாயா தத்துவமாக விபரிப்பதுடன், மனித நடத்தைகளுக்குக் காரணம் மனம் எனக் கூறுகின்றார்.

**உசாத்துணைநூல்கள்:**


1. அறிவொளி, அ., 2009,**மெய்கண்டசாத்திரம்**, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
2. இராமலிங்கம்,சி.,**தாயுமானவர் சுவாமிகள் வரலாறு,** திருப்பனந்தாள் வெளியீடு.
3. சுப்ரமணியன், வே., 1977,**தாயுமானவர்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை.
4. ஞானகுமாரன், நா., 2003,**மெய்யியல்,** யாழ்ப்பாணம்.
5. மாணிக்கனார், அ., 1996,**தாயுமானவர் திருப்பாடல்கள்,** (தொகுதி- 1), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
6. மேலது, தொகுதி -2.
7. லட்சுமிநாராயணன்,கே.சி., 2005,**வேதங்கள் ஏற்றுப் போற்றும் தமிழ் இலக்கியங்கள்,** அண்ணா நகர், சென்னை.
8. ஸ்ரீமத் சுவாமி சிவானந்தர் 1958,**தாயுமானவர்**, திருச்சி.
9. ஸ்ரீ தாயுமான சுவாமி பாடல்கள், 2008, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.